# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2053 • நவம்பர் 19 2022

Weekly E-paper • November 19, 2022



## காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது!

சுப.வீரபாண்டியன்

## ஜனநாயகத்தின் பொருளைத் திரிக்கும் யு.ஜி.சி

பேராசிரியர் கருணானந்தன்

## “சங்கமம்” பிள்ளை பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ்!

தலையங்கம்

## அடக்கமாக நில்லுங்கள்! இல்லையெனில் ஓடுங்கள்!

சாரதா தேவி

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2053 ● நவம்பர் 19 2022 Weekly E-paper ● November 19, 2022


# காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது !

**சுப.வீரபாண்டியன்**

தமிழ்நாட்டில் எப்படியாவது கால் வைத்து விட வேண்டும் என்பதற்காகத் தலைகீழாய் நின்று பார்க்கிறார்கள் பாஜகவினர்!

அவர்களின் இப்போதைய புதிய திட்டம், காசித் தமிழ்ச் சங்கமம். தமிழ்நாட்டில் இந்தியைப் புகுத்தி விட்டுக் காசிக்குப் போய்த் தமிழை வளர்க்கப் போகிறார்களாம்!

நவம்பர் 16 தொடங்கி டிசம்பர் 19 வரையில் வாரணாசியில், அதாவது காசியில், பனாரஸ் பல்கலைக்கழகத்தில் தமிழ்ச் சங்கமம் விழாவை நடத்த இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் இருந்து 2500 மாணவர்களைத் தொடர்வண்டி மூலமாக அழைத்துச் செல்லும் பணி இப்போது தொடங்கியிருக்கிறது.

காசியில் போய் இறங்கும் மாணவர்களைப் பிரதமர் மோடி அங்கு வரவேற்கக் காத்திருக்கிறாராம்! குஜராத் பாலம் அறுந்து தொங்கி இறந்து போனவர்களைக் கூடப் பார்க்காத மோடி, தமிழ்நாட்டு மாணவர்களுக்காக அங்கே காத்திருக்கிறார்! எல்லாம் 2024 தேர்தல் அரசியல்தான்.

இங்கிருந்து புறப்படும் மாணவர்களுக்கு ஆரத்தி எடுத்து குங்குமம் வைத்து அனுப்பி வைக்கிறார்கள். இது தமிழ்ப் பயணமா, தல யாத்திரையா என்று தெரியவில்லை!

பயணச்சீட்டு, தங்குமிடம், சுற்றிப் பார்க்க வழிவகை அனைத்தும் செய்யப்படுகிறது. தமிழ் என்ற வலையின் மூலம் தமிழ் மாணவர்கள் என்னும் மீன்களைப் பிடிக்க முயற்சிக்கிறார்கள். காசிக்குப் போனால் எல்லாம் சரியாகிவிடும் என்று உபதேசிக்கிறார்கள்.

கவிஞர் பொன் செல்வகணபதி எழுதியுள்ள அந்தக் கவிதை வரிகள்தான் இதற்கு ஏற்ற விடையாக உள்ளது.

“காசிக்குப் போனாலும் கருமம் தொலையாது மாசில்லா தமிழ் முன்னே மதவாதம் செல்லாது!” இதுதான் உண்மை.

இந்த நேரத்தில், காசி பனாரஸ் பல்கலைக்கழகம் பற்றிக் கொஞ்சம் திரும்பிப் பார்ப்பது நல்லது. 1916 ஆம் ஆண்டு பனாரஸ் இந்துப் பல்கலைக்கழகம் மாளவியாவால் தொடங்கப்பட்டது. அவரை “மண்ணுருண்டை மாளவியா”என்று அழைப்பார்,தந்தை பெரியார். அது முழுக்க முழுக்க இந்துத்துவத்தை மையமாகக் கொண்ட ஒரு கல்வி நிறுவனம். பார்ப்பனர்களும், உயர் சாதி என்று கூறப்படும் வகுப்பினரும் கூடுதலாகப் படிக்கும் பல்கலைக்கழகம்.

அங்குதான் 1978 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் துணைப் பிரதமராக இருந்த ஜெகஜீவன் ராமுக்கு ஒரு பெரிய அவமானம் ஏற்பட்டது. சம்பூரானந்தர் சிலையை ஜெகஜீவன்ராம் திறந்து வைத்தார். அப்போது அங்கிருந்த பார்ப்பன மாணவர்கள், ஜெகஜீவன்ராம் சாதியைச் சொல்லி வெளியேறு என்று கூச்சலிட்டார்கள். அவருக்குத் தண்ணீர் கூடக் கொடுக்கவில்லை என்று அவருடைய மகள் மீரா குமாரி வேதனையோடு சொன்னார். அவர் திறந்து வைத்த காரணத்தினாலேயே கங்கை நீர் கொண்டு அந்தச் சிலையைக் கழுவித் தீட்டு கழித்தார்கள்.

மறுநாள் சென்னை வந்த துணை பிரதமர் ஜெகஜீவன்ராம், இந்தக் கொடுமையை, பெரியார் பிறந்த மண்ணில் சொல்லாமல், நான் வேறு எங்கு போய்ச் சொல்வது என்று மிகுந்த வேதனையோடு, சென்னை மயிலாப்பூர் மாங்கொல்லையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசினார்.

இதுதான் பனாரஸ் பல்கலைக்கழகம் பின்பற்றும் சனாதனம். அதனால் தான் நம்முடைய சனாதனத்திற்கு ஆளுநராக விளங்கும் ஆர். என். ரவி அவர்கள், எல்லோரும் காசிக்குப் போய் வாருங்கள், அங்கு இருக்கும் படகோட்டி கூட என்னை விட நன்றாகத் தமிழ் பேசுவார் என்று சொல்லி வழியனுப்பி வைத்திருக்கிறார்!

இதனை அவருடைய ஒப்புதல் வாக்குமூலம் என்று நாம் கொள்ளலாம். காசியில் இருக்கும் படகோட்டியை விட மோசமாகத் தமிழ் பேசும் இவர்தான், இங்கே திருக்குறள் ஆராய்ச்சி எல்லாம் செய்கிறார்! இந்தக் கேலிக் கூத்தை நாம் என்னவென்று சொல்வது!

போகட்டும், முன்பு தருண் விஜய் என்பவரை அழைத்து வந்து திருக்குறளை பற்றிப் பேச வைத்து, தமிழர்களைக் கவர முடியுமா என்று பார்த்தார்கள். அவர் இங்கிருந்து எடுத்துச் சென்ற திருவள்ளுவர் சிலை இப்போது வாரணாசியில் எங்கோ ஒரு மூலையில் கிடக்கிறது. வள்ளுவருக்கே இந்த நிலைமை என்றால், வாரணாசிக்கு அழைத்துச் செல்லப்படும் தமிழர்களுக்கு என்ன நிலை ஏற்படுமோ தெரியவில்லை!

ஒன்றே ஒன்றை நாம் அழுத்தமாய் சொல்லலாம். தமிழ் சங்கமத்தை நடத்த எங்களுக்கு வாரணாசியோ, வடநாட்டுப் பார்ப்பனர்களோ தேவையில்லை. நம் தமிழை நாம் வளர்ப்போம்! நம்மை நம் தமிழ் காப்பாற்றும்!!

●

## நீதிக்கட்சி பிறந்த நாள்



டாக்டர் நடேசனார் பிட்டி. தியாகராயர் டாக்டர் டி.எம்.நாயர்

1916 நவம்பர் 20ஆம் நாள் அன்று, சென்னையில் நீதிக்கட்சி என்று அறியப்படுகிற, தென்னிந்திய நல உரிமைச் சங்கம் தொடங்கப்பட்டது. 106 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன! அந்த நீதிக் கட்சியின் தொடர்ச்சி தான் இன்றைக்கும் தமிழ்நாட்டில் செல்வாக்கோடு திகழும் நம் திராவிட இயக்கம்!

சமூக நீதிக்கு விதை போட்ட ஆட்சி, நீதிக் கட்சியின் ஆட்சிதான்! எனவே அந்த நாளை நாம் எல்லோரும் கொண்டாடுவோம்! நாளை அனைத்து சமூக வலைத்தளங்களிலும் #justiceparty என்னும் குறியீட்டைப் பயன்படுத்தி அந்த நாளின் சிறப்பை மக்களிடையே பரப்புவோம்!

காலையிலிருந்து சமூக வலைத்தளங்கள், நீதிக் கட்சி பற்றிப் பேசட்டும்! பரவட்டும் திராவிடத்தின் புகழ்!!



# ஜனநாயகத்தின் பொருளைத் திரிக்கும் யு.ஜி.சி

பேராசிரியர் கருணானந்தன்


யுஜிசி தலைவர் ஜெகதீஷ் குமார் அவர்களுடைய ஒரு சுற்றறிக்கை எல்லா ஆளுநர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தச் சுற்றறிக்கையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 26ஆம் நாள், அரசமைப்புச் சட்ட நாள் என்று கொண்டாடப்படுகிறது, இந்த ஆண்டு அரசமைப்புச் சட்ட நாள் என்பதனை ‘இந்தியா – ஜனநாயகத்தின் தாய்’ என்ற ஒரு தலைப்பில் கொண்டாடப்பட வேண்டும் என்றும், அதற்கான சிறப்புரைகள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும் என்றும் ஆளுநர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். ஆளுநர்கள் பல்கலைக்கழகங்களின் வேந்தர்களாக அனைத்து மாநிலங்களிலும் இல்லை. ஆளுநரை வைத்துக்கொண்டு மாநிலத்தின் கல்வி உரிமைகளில் தலையிடுவது என்பது ஒருபுறம் இருந்தாலும், ஒவ்வொரு கல்வி வளாகத்திலும் இந்தக் கூட்டங்களை நடத்த வேண்டும் என்று சொல்வது அத்துமீறிய செயல். யுஜிசியினுடைய பணி அது அல்ல. யுஜிசி, ஒரு பாசிசச் செயல் திட்டத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது. இந்திய அரசியலமைப்பின் பல சிறப்புக் கூறுகளை விளக்குவதற்கு முயற்சி எடுங்கள் என்று சொன்னால் அதற்குப் பொருள் இருக்கிறது. ஆனால் இந்த நாளை, பழைமையை மீட்டுருவாக்கம் செய்வதற்காக, பழைமையைப் போற்றுகின்ற நாளாக இவர் வைத்திருக்கின்றார். 18 தலைப்புகளை இவர் கொடுத்து இருக்கின்றார். இந்தத் தலைப்புகளின் மீது உரைகள் நடத்தப்பட வேண்டும் என்று சொல்லுகின்றார்.18 தலைப்புகளும், நாம் வெறுக்கின்ற பழையகாலத்து அமைப்புகளின் நிகழ்வுகளைச் சிறப்பிக்கும் முறையில் அமைந்திருக்கின்றன. இந்தத் தலைப்புகள் குறித்த விமர்சனப் பார்வைகள் வரக்கூடாது என்பதற்காக, இவர் இதைப்பற்றி பேசுகின்றவர்கள், ICHR வெளியிட்டுள்ள, “இந்தியா – ஜனநாயகத்தின் தாய்” என்ற புத்தகத்தை அடிப்படையாகக் கொண்டு உரைகள் நிகழ்த்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார். இது எப்படி கல்வி சுதந்திரம் ஆகும்?

ஹரப்பாவில் ஜனநாயக நிறுவனங்கள் உலகிலேயே முதலாவது தோன்றுகின்றன என்பதாக, ஹரப்பாவை வேத காலத்திற்குக் கொண்டு வந்து, அந்த வேதத்தில் இருக்கிற சில நிறுவனங்களை, சபா சமிதி போன்றவற்றை ஜனநாயக நிறுவனங்கள் என்று இவர்களே விளக்கம் தந்து, அது ஹரப்பா–சிந்துவெளி நாகரீகத்தில் ஆரியர்களால் கொண்டுவரப்பட்டதாகச் சித்தரிக்கும் ஒரு முயற்சி நடக்கிறது. இதைத் தவிர இவர்கள் கட்டப்பஞ்சாயத்து என்று நாம் அருவருப்பாகப் பார்க்கின்ற காப் பஞ்சாயத்து என்பதை ஜனநாயகத்தின் ஒரு மரபு என்று கூறுகின்றார்கள். இந்திய அரசியலமைப்பின் அடிப்படையே ‘Rule of Law’ என்பதுதான். சட்டத்தின்முன் அனைவரும் சமம், அதே சட்டம் அனைவருக்கும் பொருந்தும், இதை மீறி யாரும் இருக்க முடியாது என்ற மூன்று அடிப்படையைக் கொண்ட சட்டத்தின் ஆட்சி. இந்தச் சட்டத்தின் ஆட்சியை மறுக்கின்ற தலைப்புகளைக் கொடுத்து, அதைப் பற்றி உரை நிகழ்த்த வேண்டும், அதை இந்தியாவின் பெருமை என்று கூற வேண்டும் என்று கூறியிருக்கின்றார். கட்டப்பஞ்சாயத்து என்பது இந்தியாவில் ஜாதிப் பஞ்சாயத்துகள். ஆதிக்க ஜாதிகள் நடத்துகின்ற நீதிமன்றங்கள் என்று சொல்லப்படுகின்ற அநீதிமன்றங்களைப் புகழ்கின்ற வகையில் நடத்த வேண்டும் என்று சொல்கிறார்.

தமிழ்நாட்டில் இருந்த ‘Local self government’ – மகாசபையைக் குறிப்பிடுகிறார்கள். மகாசபை என்பது, பிராமணர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்ட பேரரசுகள் கூட தலையிட முடியாத பிரம்மதேயங்கள் இருந்ததைச் சுட்டிக் காட்டுபவை. அந்தச் சலுகை பிற சமூகப் பிரிவினர்களுக்குத் தரப்படுவதில்லை. பிராமண ஆதிக்கத்திற்கான ஏகபோகத்திற்கான அந்த ஆட்சி முறையை ஜனநாயக முறை என்று குறிப்பிடுகிறார்கள். ஜனநாயகம் என்பதின் பொருளைக் கூட இவர்கள் திரிக்கின்றார்கள். ஜனநாயகம் என்றால் அனைவருக்குமானது, அனைவருக்கும் சமத்துவத்தை அளிப்பது, அனைத்து மக்களையும் சமமாக ஏற்றுக் கொள்வது. நான்கு வர்ணங்களைக் கூறுகின்ற அந்தப் பழைய காலம், ஐந்தாவது வர்ணத்தையும் உருவாக்கிய அந்தக் காலத்தை, எப்படிச் சமத்துவ காலம் என்பது? ஒவ்வொரு ஜாதிக்கும் ஒரு அமைப்பு என்றால் அது எப்படி ஜனநாயக அமைப்பாகும்? ‘Mobocracy’ என்ற கும்பல் ஆட்சியை, ஜனநாயகம் என்று கூறிவிட முடியாது. வெறியூட்டப்பட்ட கும்பல்கள், பிற கும்பல்களை அடக்குவதை ஜனநாயகம் என்று கூற முடியாது.

ஆகவே நவம்பர் 26 என்பதை இந்திய அரசியலமைப்பில் உள்ள சட்டத்தின் ஆட்சி, ‘secular’ மதச்சார்பற்ற ஆட்சி, கூட்டாட்சி, குடியாட்சி, ஜனநாயகம் என்பதைச் சிறப்பிக்கும் நிகழ்வை நடத்துவதற்குப் பதிலாக, அவற்றைக் குழி தோண்டிப் புதைப்பதற்காகவே, இவர்கள் அவற்றிற்கு முரண்பட்டத் தலைப்புகளைத் தந்து இந்த நிகழ்வுகளை நடத்தச் சொல்லுகிறார்கள். இந்தப் பாசிசத் திட்டத்தை அரங்கேற்றுவதற்கு, இப்போது ஆளுநர்களைத் தூண்டிவிடுகிறார் யுஜிசியின் தலைவர் ஜெகதீஷ் குமார் என்பவர்.

பிஜேபி அரசாங்கம் ஒவ்வொரு நிறுவனத்தையும் தன்னுடைய கம்யூனல் அஜெண்டாவிற்காகத் தவறாகப் பயன்படுத்தி வருகிறது. ஏற்கனவே அனைவருக்குமான பொது தேசிய வரலாற்றுப் பாடப் புத்தகங்களைத் தந்தார்கள். நம்மைப் போன்றவர்கள் எதிர்த்தோம். ஆனால் கல்வியாளர்களோ, கல்வி உலகமோ, அரசியல் உலகமோ போதுமான எதிர்ப்பைக் காண்பிக்கவில்லை. அதனால் அவர்கள் துணிச்சல் பெற்று, இப்பொழுது அரசியலமைப்புச் சட்ட நாளை, சமத்துவத்தைக் கொண்டாட வேண்டிய நாளை, ஜாதியப் படிநிலை சமுதாய அமைப்பைக் கொண்டாடும் வகையில் தலைப்புகளைத் தந்துள்ளார்கள். இதை நாம் வன்மையாகக் கண்டித்தாக வேண்டும். ●






*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்

## “சங்கமம்” பிள்ளை பிடிக்கும் ஆர்.எஸ்.எஸ்!



மதன் மோகன் மாளவியாவால் 1916 ஆம் ஆண்டு காசியில் நிறுவப்பட்ட பனாரஸ் “இந்து” பல்கலைக் கழகமும், சென்னை ஐ.ஐ.டியும் இணைந்து காசி தமிழ்ச் சங்கமம் என்ற ஒரு இந்துத்துவா சார்ந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கின்றன.

இதில் கலந்து கொள்ள 2500 மாணவர்கள் உள்படப் பலர் அழைத்துச் செல்லப்படுகின்றனர். இது குறித்துத் தமிழக அரசிடம் யாரும் கலந்து பேசவில்லை.

ஆளுநர் ரவி சொல்கிறர், காசிக்கும், தமிழ்நாட்டிற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதாம்.

காசியைச் சேர்ந்த வடநாட்டவர்கள் தலையில் கல்லைச் சுமக்க வைத்துக் கட்டிக் இழுத்துக் கொண்டு வந்த சேரன் செங்குட்டுவன், ஆரியப் படையழித்துக் கடந்த நெடுஞ்செழியன் வரலாறுகள் ஆளுநருக்குத் தெரியவில்லை.

‘இந்தியா’ என்ற கருத்தாக்கம், ‘பாரதம்’ என்ற சிந்தனையை மறைத்து விட்டதாம், ஆளுநர் ரவியின் உளறல் இது.

இதோ ஆசிரியர் (கி.வீரமணி ) அவர்கள் சொல்கிறார்:

‘இந்தியா’ என்பது மதச்சார்பற்றது. ‘பாரதம்’ என்பது ஹிந்து மதச் சார்புடையது. ‘இந்தியா’ என்பது ஜனநாயகம், ‘பாரதம்’ என்பது சனாதனம். ‘இந்தியா’ என்றால் மக்களுக்கு அரசதிகாரம் தரும் குடியரசு, ‘பாரதம்’ என்றால் ராஜகுருக்களுக்கு அதிகாரம் தரும் முடியரசு. ‘பாரதம்’ என்றால் அங்கே மனுநீதிதான்! ‘இந்தியா’ என்றால் அரசமைப்புச் சட்டப்படி சமூகநீதி பேச வாய்ப்பு இருக்கிறது. பழைய ‘பாரத’த்தில் ஜாதிக்கொரு நீதிதான்.

பூனை வெளியே குதித்து விட்டது.

பெரியார் மண்ணாகிய தமிழ் நாட்டில் கால் வைக்க முடியாத ஆர்.எஸ்.எஸ் / பா.ஜ.க கூட்டத்தார் கலாச்சாரச் ‘சங்கமம்’ என்ற பெயரில் “பிள்ளை பிடிக்க”த் தொடங்கி இருக்கிறார்கள். அதுவும் கல்விக் கூடங்களில் மாணவர்களை நோக்கி அவர்களின் கொடுங்கரம் நீள்கிறது. மக்கள் எச்சரிக்கையாகவும், அரசின் பார்வை அங்கே கவனமாகவும் இருக்கவும் வேண்டும்.

காசி காவிகளின் கூடாரம்.!

தமிழ்நாடு கருப்புச் சட்டைகள் பாசறை!!

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்

ஆசிரியர் குழு:
உதயகுமார்
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி

வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com

மின் அஞ்சல்:
karunchattai@gmail.com

டுவிட்டர்: suba_vee

தொடர்புக்கு
120. என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை- 600 024,

தொலைபேசி: 044-2472 6408

## தலைவர் கலைஞரின் உற்ற நண்பர்
## காரைக்குடி இராம.சுப்பையா
### (14.11.1908 - 21.05.1997)



அப்பா!
நீங்கள்
உழைத்துப்
பார்த்திருக்கிறோம்,
களைத்துப்
பார்த்ததில்லை!

குடும்பம் பற்றிய சிந்தனை
கொஞ்சம்!
கொள்கை கட்சி
பற்றியே
நெஞ்சம்!

கறுப்பும் சிவப்பும்
உங்களுக்கு
வெறும்
கொடி இல்லை!

அந்த
இருவண்ணக்
கொடிதான்
நீங்கள்
ஏந்திப் பிடித்த ஆயுதம்!

அந்த
இருவண்ணக்
கொடிதான்
உங்களைத்
தாங்கிப் பிடித்த
ஊன்றுகோல்!

இன்று நான்
மேடைகள் எங்கும்
ஏறி நிற்கிறேன்!
அன்று நீங்கள்
மேடையை
எல்லாம்
தாங்கிப்
பிடித்ததால்!

அப்பா!
உங்கள் தோள்கள்
தாங்கிய
அந்தக் கொடியை
இறுதிநாள் வரை
ஏந்திப் பிடிப்போம்!

அன்புடன்,
**சுப.வீரபாண்டியன்,**
பொதுச் செயலாளர், திராவிட இயக்கத் தமிழர் பேரவை.



12.11.22 அன்று ஈரோடு கலை, அறிவியல் கல்லூரி மாணவரிடையே பேரவைப் பொதுச் செயலாளர், பேராசிரியர் சுப.வீரபாண்டியன் உரையாற்றிய போது!

# அடக்கமாக நில்லுங்கள்! இல்லையெனில் ஓடுங்கள்!

சாரதா தேவி

இதோ சொல்லிவிட்டார்! அவரே சொல்லிவிட்டார்! ஆளுநர் ரப்பர் ஸ்டாம்ப் இல்லையாம்! இங்கே நிறைய பேர் பேசுவது காதில் ஈயமாகப் போய் விழுந்திருக்கிறது. அதுதான் மனிதர் பொங்கிவிட்டார். இதை ஏன் திருவனந்தபுரத்தில் போய்ச் சொன்னார்?!

ஆம்! கடந்த வாரம் திருவனந்தபுரத்தில் நடந்த லோக் ஆயுக்தா நிகழ்ச்சியில்தான் அவ்வாறு பேசியுள்ளார். "லோக் ஆயுக்தா அமைப்புகள் தோல்வியடையாமல் பாதுகாப்பதெல்லாம் ஆளுநர் கடமை" அதெல்லாம் தெரியாமல் நாம் ஆளுநரைக் குறைத்து மதிப்பிடுகிறோம் என்று சொல்கிறார். லோக் ஆயுக்தா அமைப்புகள் வெற்றி பெற பா.ஜ.க. ஆளும் மாநில முதலமைச்சர்கள் தாமே முன்வந்து கைதாகிட வேண்டுமே! சட்டத்திற்கு எதிராக சனாதன தர்மத்தையும், முறைகேடுகளையும் உயர்த்திப் பிடிப்பவர்கள் அவர்கள்தானே? முதலமைச்சர்களையும் லோக் ஆயுக்தா அமைப்பின் வரம்புக்குள் கொண்டுவந்த துணிவும், நேர்மையும் கொண்ட திராவிடத்தை எதிர்த்துவிட்டு உங்கள் கடமையை எப்படிச் செய்வீர்கள் ஆளுநர் அவர்களே?

மக்கள் நல அரசாக, சுறுசுறுப்பாக இயங்கும் தி.மு.க. அரசை மக்கள் பாராட்டுகிறார்கள். ஆனால், அரசு எங்கே மேலும் சிறப்பாக இயங்கிவிடப் போகிறதோ, தமிழ்நாட்டு அரசுக்கு எங்கே மேலும் நல்ல பெயர் வந்துவிடப் போகிறதோ என கவலை கொள்ளும் நீங்கள், நீட் உள்ளிட்ட தலையாயக் கோப்புகளில், கையெழுத்துப் போடாமல் இருப்பதற்குக் காரணம் "வேறு" சொல்கிறீர்களே?

அட இவர்தான் இப்படி என்றால், அங்கே தெலுங்கானாவில் உட்கார்ந்துகொண்டு, "நான் தமிழ்நாட்டு அரசியல்ல தலையிடக் கூடாதா? என்னை அப்படிச் சொன்னால், நான் உங்களைப் பற்றித் தவறாகத்தான் பேசுவேன்" என்று வரம்பற்றப் பொய் பேசுகிறார் தமிழிசை!

இவர்கள் மட்டுமா?

எங்கே எல்லாம் மக்கள் அவர்களுக்கு ஓட்டுப் போடவில்லையோ அங்கே எல்லாம் ஆளுநர்கள் என்ற பெயர்களில் வரிசையாகக் ஏஜென்ட்டுகளைக் களமிறக்கி, மக்களாட்சியைக் கேலிக் கூத்தாக்கித் தன் சர்வாதிகாரத்தை



நிலை நாட்டத் துடிக்கிறது ஒன்றிய பா.ஜ.க. அரசு!

ஒன்று மட்டும் தெளிவாகத் தெரிகிறது. மக்களைப் பற்றி இவர்களுக்குத் துளியும் அக்கறை இல்லை என்பதுதான் அது!

தேர்தல் தில்லுமுல்லுகள் கடந்து, குதிரை பேரம், பணப் பட்டுவாடாக்கள், ஊடக செல்போன் கையூட்டுகள் கடந்து, வேறு யாராவது ஆட்சியைப் பிடித்துவிட்டால், உள்ளே அதிகார மட்டத்தில் தடைகள் ஏற்படுத்தப் பூணூல்கள் காத்திருக்கின்றன! கோப்புகள் மேல்மட்டத்திற்கு நகருமுன்னே அதன் தரவுகள் பா.ஜ.க.வின் பொறுப்பாளர்களுக்குப் போய்விடுகின்றன! குண்டுவெடித்தவனின் வாட்சப் ஸ்டேட்டஸ் கூட காவல்துறைக்கு முன்பு பா.ஜ.க வின் கட்சிப் பொறுப்பாளருக்குக் கிடைத்துவிடுகிறது! அதில் காது, மூக்கு, கொண்டை வைத்து அமளிகள் தயார் செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் அமைதியான ஆட்சி நடந்து விடக் கூடாது. அவர்களின் நோக்கம் அவ்வளவே!


அம்பானிகளுக்கு உதவி செய்து பங்கு பெற்ற வகையில், பி.எம்.கேர் நிதியில் கணக்குக் காட்டாமல் சுருட்டிய வகையில், இன்னும் சிலைகள் வைப்பது, கோயில் கட்டுவது என அவாளுக்குக் கொடுத்த அனுமதிகள் வகையில், செய்த அரைகுறை வேலைகளில் கிடைத்த கொள்ளை லாபங்களின் வகையிலெல்லாம் குவிந்திருக்கும் பணத்தைப் பாதாளம் வரை பாய்ச்சிவிடத் துடிக்கும் கட்சிக்காகத்தான் இவ்வளவு அலங்கோலங்கள்!

ஆளுநர்கள்தான் இந்த வேலைக்கு சாவி கொடுக்கப்பட்ட பொம்மைகள்! சில பொம்மைகள், AI (Artificial Intelligence) பொம்மைகள் போன்றவை, தமிழக ஆளுநரைப் போல. திருக்குறள், சனாதனம், தமிழ் என்று நாளும் கூடுதல் பெர்ஃபார்மன்ஸாக இருக்கிறது! இந்தியாவில் 17 மாநிலங்களில் ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் ஆளுநர்களாக இருக்கிறார்களாம், விளங்கிவிடும் நாடு!

வரலாறு நெடுகிலும் சர்வாதிகாரிகள் என்னதான் "இராவணப் பிரயத்தனம்" செய்து தங்கள் ஆட்சியைக் கொண்டுவந்தாலும் அவை ஒன்றிரண்டு தசாப்தங்களை எப்போதும் கடந்ததில்லை! ஆளுநரைத் திரும்பப் பெற ஜனாதிபதியிடம் முறை செய்திருக்கின்றன தி.மு.க. உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகள்! அடுத்து டிசம்பர் மாதத்தில் 1 லட்சம் மக்களோடு முற்றுகைப் போராட்டம் அறிவித்திருக்கிறார் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் முத்தரசன்!

பதவிக்குரிய மதிப்போடு மக்கள் தேர்ந்தெடுத்த அரசோடு ஒத்துழைப்பதாக இருந்தால், அடக்கமாக நில்லுங்கள்! இல்லையெனில் பதவி விலகி ஓடுங்கள்! இதுதான் தமிழ்நாட்டு மக்களின் ஒருமித்த குரல்!

●




இனமானப் பேராசிரியர் படிப்பு வட்டம் சார்பாக 18-11-2022 அன்று வ.உ.சி.நினைவு நாளில் புகழ் வணக்க உரை நிகழ்த்தினார் பேராசிரியர் வீ.அரசு.

நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளர் மதிவாணன், இணைய வழியில் ஒருங்கிணைத்தார்.